



# மாண்புமிகு
# தமிழ்நாடு முதலமைச்சர்
# புரட்சித்தலைவி அம்மா
# அவர்கள் அரசின்
# மூன்றாண்டு சாதனைகள்

## தருமபுரி மாவட்டம்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்



# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

# புரட்சித்தலைவி அம்மா அவர்கள்

# அரசின் மூன்றாண்டு சாதனைகள்

## தருமபுரி மாவட்டம்

சிறப்பு வெளியீடு எண். 42

இலவச வெளியீடு

# தமிழரசு

ஜூலை 2014

தொகுப்பு – கள விளம்பரப் பிரிவு

*வெளியிடுபவர் :*
இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்புத்துறை,
சென்னை.

## பதிப்புரை

*“இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த*
*வகுத்தலும் வல்லது அரசு” (குறள் 385)*

என்ற வள்ளுவனின் குறளுக்கிணங்க, ஏழை எளிய மக்களின் நலனுக்காக பல்வேறு நலத் திட்டங்களை உருவாக்கி செயல்படுத்தி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தலைமையின் கீழ் மூன்றாண்டுகளில் முழுமையான வளர்ச்சியை கண்டோம். மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியினை அழகுற எடுத்துக்காட்டும் வகையில் தருமபுரி மாவட்டத்தில் அரசு துறைகளின் சார்பில் நிகழ்த்தப்பட்ட சாதனைகள் முழுமையாக தொகுக்கப்பட்டு, **“மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மாவின் அரசின் மூன்றாண்டு சாதனைகள் – தருமபுரி மாவட்டம்”** எனும் தலைப்பில், எழில்மிகு கையேடாக செய்தி மக்கள் தொடர்புத் துறையால் வெளியிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தலைமையில், அமைதி! வளம்! வளர்ச்சி! பாதையில் வெற்றி நடை போடும் தருமபுரி மாவட்டத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியை படம் பிடித்துக்காட்டும் விளக்கக் கையேடாக இந்நூல் அமைந்துள்ளது.

இக்கையேட்டினை அனைவரும் படித்து பயன்பெற அன்புடன் விழைகிறேன்.

**மூ. இராசாராம்,** இஆப
அரசுச் செயலாளர்
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை

# தருமபுரி மாவட்டம்





*விலையில்லா அரிசி வழங்கும் திட்டம்*

**விலையில்லா அரிசி வழங்கும் திட்டம்**

- **3,96,881** குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதந்தோறும் தலா **20** கிலோ அரிசி வீதம் **6,504** மெட்ரிக் டன்



*விலையில்லா கறவை மாடுகள் வழங்கும் திட்டம்*

விலையில்லா அரிசி, அந்தியோதயா அன்னயோஜனா திட்டத்தின் கீழ் 53,008 குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதந்தோறும் தலா 35 கிலோ அரிசி வீதம் 1,846 மெட்ரிக் டன் விலையில்லா அரிசி.

**விலையில்லா கறவைப் பசு வழங்கும் திட்டம்**

- ரூ.1.59 கோடி மதிப்பீட்டில் 450 கறவைப் பசுக்கள் வழங்கப்பட்டுள்ளன. இவை 315 கன்றுகளை ஈன்றுள்ளன.
- நாள் ஒன்றுக்கு கூடுதலாக 3,600 லிட்டர் பால் உற்பத்தியாகியுள்ளது. இதன் வாயிலாக 9 புதிய பால் கூட்டுறவு சங்கங்கள் தொடங்கப்பட்டுள்ளது.



*விலையில்லா ஆடுகள் வழங்கும் திட்டம்*

## விலையில்லா ஆடுகள் வழங்கும் திட்டம்

❖ விலையில்லா செம்மறி / வெள்ளாடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் 12,594 குடும்பங்களுக்கு தலா 4 ஆடுகள் வீதம் ரூ.17.05 கோடி மதிப்பீட்டில் 50,376 விலையில்லா ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன. இவை 43,419 குட்டிகளை ஈன்றுள்ளன.

## விலையில்லா மின்விசிறி, மிக்ஸி, கிரைண்டர் வழங்கும் திட்டம்

❖ 367 கிராமங்களில் உள்ள 2,00,380 இல்லத்தரசிகளுக்கு ரூ.90.50 கோடி மதிப்பீட்டில் விலையில்லா மிக்ஸி, கிரைண்டர் மற்றும் மின் விசிறிகள்.



*விலையில்லா மின்விசிறி, மிக்ஸி, கிரைண்டர் வழங்கும் திட்டம்*

**விலையில்லா மடிக்கணினிகள் வழங்கும் திட்டம்**

- ❖ பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு ரூ.48.40 கோடி மதிப்பீட்டில் 30,271 விலையில்லா மடிக்கணினிகள்.

**விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டம்**

- ❖ 11ஆம் வகுப்பு பயிலும் 45,848 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.15.01 கோடி மதிப்பீட்டில் விலையில்லா மிதிவண்டிகள்.

**திருமண நிதியுதவியுடன் 4 கிராம் தங்கம் வழங்கும் திட்டம்**

- ❖ படித்த ஏழைப்பெண்களுக்கு ரூ.25,000 நிதியுதவியுடன் தலா 4 கிராம் தாலிக்குத் தங்கம் வழங்கும் திட்டத்தின் கீழ் 6,679 பயனாளிகளுக்கு ரூ. 16.69 கோடி



விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டம்

நிதியுதவியும், ரூ.7.36 கோடி மதிப்பிலான 26,716 கிராம் தங்கமும் வழங்கப்பட்டுள்ளது.

❖ பட்டம் / பட்டயம் படித்த ஏழைப் பெண்களுக்கு ரூ.50,000 நிதியுதவியும் தலா 4 கிராம் தாலிக்குத்தங்கம் வழங்கும் திட்டத்தின்கீழ், 2,354 பயனாளிகளுக்கு ரூ.11.77 கோடி நிதியுதவியும் ரூ.2.60 கோடி மதிப்பிலான 9,416 கிராம் தங்கமும் வழங்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்**

❖ முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் 8,154 பயனாளிகளுக்கு ரூ.13.26 கோடி செலவில் மருத்துவ சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது.



*முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்*

## சுற்றுலாத்துறை

❖ வத்தல்மலையை சுற்றுலாத் தலமாக அறிவித்து ரூ.13.14 கோடி மதிப்பில் சாலை அமைக்கும் பணி

மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில் 85 ஏக்கர் பரப்பளவில் தாவரவியல் பூங்கா அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

❖ தருமபுரி இராமாக்காள் ஏரி பொதுமக்கள் பங்களிப்புடன் ரூ.1.08 கோடி மதிப்பில் சுற்றுலாத் தலமாக மேம்படுத்தப்பட்டுள்ளது.

**ஒகேனக்கல் குடிநீர்த் திட்டம்**

❖ ஒகேனக்கல் குடிநீர்த் திட்டம் ரூ.1,928.80 கோடி மதிப்பில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 29.05.2013 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

**சிப்காட்**

❖ தருமபுரி வட்டத்தில் 1,733 ஏக்கர் பரப்பளவில் சிப்காட் அமைக்கும் பணி நடவடிக்கையில் உள்ளது.

❖ அரூர், பென்னாகரம் பகுதியில் சிட்கோ அமைப்பதற்கான இடம் ஒப்படைப்பு செய்து சிட்கோ தொழிற்பேட்டை அமைக்கும் பணி.

**புதிய வட்டங்கள் மற்றும் ஒன்றியங்கள்**

❖ காரிமங்கலம் மற்றும் நல்லம்பள்ளியை தலைமையிடமாகக் கொண்டு 2 புதிய வட்டங்களும், கடத்தூர், ஏரியூர் ஆகியவற்றை தலைமையிடமாகக் கொண்டு 2 புதிய ஒன்றியங்களும் உருவாக்கிட அறிவிப்பு.

## பொதுப்பணித்துறை (நீர்வள ஆதார அமைப்பு)

❖ தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், இராமகொண்டஅள்ளி கிராமம் அருகே மத்தளப்பள்ளம் ஆற்றின் குறுக்கே ரூ.14.15 கோடி செலவில் ஏரி கட்டப்பட்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 14.02.2014 அன்று பாசனத்திற்கு திறந்து விடப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் 700 ஏக்கர் நிலத்தில் முதல் போக சாகுபடியும், 400 ஏக்கர் நிலம் இரண்டாம் போக சாகுபடியும் செய்யப்படும்.

❖ தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டத்தில் உள்ள சின்னாற்றின் மிகுதி நீரை திருப்பி விடுவதற்காக செங்கம்பசுவன்தலாவ் ஏரியிலிருந்து வழங்கு வாய்க்கால் வெட்டி எண்டப்பட்டி ஏரி, கொண்டசாமனஅள்ளி ஏரி மற்றும் இடையிலுள்ள 8 ஏரிகளுக்கு தண்ணீர் வழங்கும் பணி. இப்பணிக்கு ரூ.10.20 கோடி நிர்வாக ஒப்புதல் அரசு ஆணை.

## பொதுப்பணித்துறை (கட்டடங்கள்)

❖ ரூ.2.72 கோடி மதிப்பீட்டில் பாலக்கோட்டில் மாவட்ட முன்சீப் நீதிமன்றக் கட்டடம்.

## நபார்டு நிதியுதவி திட்டம்

❖ ரூ.2.45 கோடி மதிப்பீட்டில் அரூர் மற்றும் பையர்நத்தம் அரசு உயர்நிலை, மேல்நிலைப்பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள் மற்றும் அறிவியல் ஆய்வகக் கட்டடங்கள்.

❖ ரூ.3.62 கோடி மதிப்பீட்டில் தருமபுரி, மாங்கரை, நெருப்பூர், மொரப்பூர், இருமத்தூர், பாப்பிரெட்டிப்பட்டி ஆகிய ஆறு இடங்களில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவ, மாணவியர் விடுதிக் கட்டடங்கள்.

❖ ரூ. 2.39 கோடி மதிப்பீட்டில் பெரியாம்பட்டி, நெருப்பூர், ஜருகு, கொளகத்தூர், அ.மல்லாபுரம், சோமனஅள்ளி, வீராணகுப்பம், கொங்குவேம்பு, பொன்னேரி ஆகிய 9 இடங்களில் கால்நடை பராமரிப்புத் துறையின் கீழ் மருந்தகக் கட்டடங்கள்.

❖ ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் அரூரில் வருவாய் கோட்டாட்சியர் அலுவலர் குடியிருப்பு, பொ.மல்லாபுரம், இலளிகம், முக்கல்நாயக்கன்பட்டி, பெரும்பாலை மற்றும் பள்ளிப்பட்டி அரசு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் கூடுதல் வகுப்பறை மற்றும் அறிவியல் ஆய்வக கட்டடங்கள் ரூ.5.43 கோடியில் கட்டும் பணிகள்.

❖ அரூரில் வணிகவரித்துறை அலுவலகம் ரூ.81 இலட்சத்திலும், தருமபுரியில் ஒருங்கிணைந்த பதிவுத்துறை அலுவலகம் மற்றும் காரிமங்கலம், மொரப்பூர், கடத்தூர் மற்றும் மாரண்டஅள்ளி ஆகிய 4 இடங்களில் சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்கள் ரூ.3.81 கோடியில் கட்டும் பணிகள்.

❖ பஞ்சப்பள்ளியில் அரசு குழந்தைகள் காப்பக அலுவலர் குடியிருப்புக் கட்டடம் ரூ. 1.61 கோடியிலும், செல்லமுடி, தருமபுரி, பி.அக்ரகாரம், மல்லுப்பட்டி, மாட்லாம்பட்டி, கெரகோடஅள்ளி, கடகத்தூர் ஆகிய

ஏழு இடங்களில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள் கட்டடம் ரூ.8.04 கோடி மதிப்பில் கட்டும் பணிகள்.

❖ சித்தேரியில் அரசு பழங்குடியினர் நல உண்டு உறைவிட மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் மாணவ, மாணவியர்களுக்கான விடுதிக் கட்டடம் ரூ.4.34 கோடி மதிப்பில் கட்டும் பணிகள்.

❖ தருமபுரியில் மாவட்ட தொழில்மைய அலுவலகக் கட்டடம் ரூ.1.25 கோடி மதிப்பில், தருமபுரியில் அரசு மதுபான கிடங்கு மற்றும் அலுவலகக் கட்டடம் ரூ.2.64 கோடி மதிப்பில், தருமபுரியில் புள்ளியியல் துறை மாவட்ட உதவி இயக்குநர் அலுவலகக் கட்டடம் ரூ. 50.66 இலட்சம் மதிப்பில் கட்டும் பணிகள்.

## பொதுப்பணித்துறை (மருத்துவப்பணிகள்)

❖ ரூ.43.67 கோடி மதிப்பில் தருமபுரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக் கட்டடம்.

❖ ரூ.2.35 கோடி மதிப்பில் தருமபுரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மகப்பேறு பிரிவு விரிவாக்கக் கட்டடம் கட்டும் பணி.

❖ ரூ. 1 கோடி மதிப்பில் போதை மீட்பு மையக் கட்டடம் கட்டும் பணி.

## வருவாய்த்துறை

### சமூகப் பாதுகாப்புத் திட்டம்

❖ 50,836 முதியோர்களுக்கு மாதம் ரூ. 1,000 வீதம் ரூ.192.16 கோடி ஒய்வூதியம்.

❖ 2,744 ஆதரவற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு மாதம் ரூ.1,000 வீதம் ரூ.10.49 கோடி ஒய்வூதியம்.

❖ 2,920 ஆதரவற்ற கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு ரூ.11,03,76,000 நிதியுதவி.

❖ 50 வயதைக் கடந்த 429 திருமணமாகாத ஏழை மகளிருக்கு ரூ.1,62,16,200 ஒய்வூதியம்.

**இந்திரா காந்தி தேசிய விதவை ஒய்வூதியத் திட்டம்**

❖ 12,196 விதவைத் தாய்மார்களுக்கு ரூ.46.1 கோடி ஒய்வூதியம்.

**இந்திரா காந்தி தேசிய மாற்றுத்திறனாளிகள் ஒய்வூதியத் திட்டம்**

❖ 1,267 மாற்றுத்திறனாளிகளுக்கு மாதம் ரூ. 1,000 வீதம் ரூ.4,78,92,600 ஒய்வூதியம்.

**ஆதரவற்ற விதவை ஒய்வூதியத்திட்டம்**

❖ 4,513 விதவைத் தாய்மார்களுக்கு மாதம் ரூ.1,000 வீதம் ரூ. 17.05 கோடி உதவித்தொகை.

**நலிந்தோர் நலத்திட்ட நிவாரண நிதியுதவித் திட்டம்**

❖ 141 பயனாளிகளுக்கு ரூ.1.46 இலட்சம் உதவித்தொகை.

**விரைவு பட்டா மாற்றம் செய்து தரும் புதிய திட்டம்**

❖ விரைவு பட்டா மாற்றம் செய்து தரும் புதிய திட்டத்தின் கீழ் 36,820 பட்டாக்கள் மாறுதல்.



முதியோர் ஒய்வூதியம்

**விபத்து நிவாரண உதவித் தொகைத் திட்டம்**

❖ 67 பயனாளிகளுக்கு விபத்து நிவாரண உதவித் தொகையாக ரூ.51.85 இலட்சம்.

**வீட்டுமனைப்பட்டா**

❖ 14,273 பயனாளிகளுக்கு விலையில்லா வீட்டுமனைப் பட்டாக்கள்.

**அகதிகள் முகாம் இலங்கைத் தமிழர்களுக்கான உதவித்தொகைத் திட்டம்**

❖ முதியோர் மற்றும் விதவை ஒய்வூதியமாக 212 பயனாளிகளுக்கு ரூ.80.13 இலட்சம்.

**பயோமெட்ரிக் ஸ்மார்ட் கார்டு மூலம் ஒய்வூதியம் வழங்கும் திட்டம்**

❖ சமூக பாதுகாப்புத் திட்ட ஒய்வூதியங்களை சரியான பயனாளிகளுக்கு மாதத்தின் முதல் வாரத்திலேயே

துரிதமாக வழங்கும் வகையில் பயோமெட்ரிக் ஸ்மார்ட் கார்டை (Bio Metric Smart card) வழங்கி சேவையாளர் உதவியுடன் வங்கிகள் வாயிலாக ஒய்வூதியம் வழங்கும் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட 131 கிராமங்களில் உள்ள 22,286 ஒய்வூதியதாரர்களுக்கு பயோமெட்ரிக் அட்டை வழங்கப்பட்டு, வங்கி மூலம் ரூ.84.24 இலட்சம் ஒய்வூதியம்.

❖ 182 கிராம நிருவாக அலுவலர்களுக்கு ரூ.45.75 இலட்சம் செலவில் தலா ரூ.25,140 மதிப்பில் பிரிண்டர்களுடன் கூடிய மடிக்கணினிகள்.

**முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம்**

❖ 50,887 விவசாயிகளுக்கு ரூ.73.84 கோடி நிதியுதவி.

**அம்மா திட்ட முகாம்**

❖ பொதுமக்களிடமிருந்து 70,974 மனுக்கள் பெறப்பட்டு 64,930 மனுக்கள் மீது தீர்வு காணப்பட்டுள்ளது. இதர மனுக்கள் மீதும் நடவடிக்கை.

## இந்துசமய அறநிலையத்துறை

**திருக்கோயில் அன்னதானத் திட்டம்**

❖ 6 திருக்கோயில்களில் நாள்தோறும் 300 பக்தர்களுக்கு அன்னதானம்.

**முன்னாள் படைவீரர்கள் நலத்துறை**

❖ 318 முன்னாள் படைவீரர்கள் குடும்ப நபர்களுக்கு ரூ.24.09 இலட்சம் கல்வி உதவித்தொகை மற்றும் வங்கிக்கடன் வட்டி மானிய நிதியுதவி.



*முன்னாள் படைவீரர்கள் குடும்ப நபர்களுக்கு கல்வி உதவித்தொகை*

**மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை**

**சிறப்புப் பொது விநியோகத் திட்டம்**

❖ **3,96,881** குடும்ப அட்டைதாரர்களுக்கு தலா ரூ.**30** மதிப்பிலான பாமாயில், துவரம் பருப்பு, உளுத்தம்பருப்பு ஆகியவை மலிவுவிலையில் விநியோகம்.

**ஒரு கிலோ சன்னரக அரிசி ரூ.20க்கு வழங்கும் திட்டம்**

❖ **8,487** குடும்பங்களுக்கு ரூ.**8.50** இலட்சம் மதிப்பிலான அரிசி.

# பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

- 34,738 மாணவ, மாணவியர்களுக்கு ரூ. 8 கோடி மதிப்பீட்டில் விலையில்லா மிதிவண்டிகள்.
- 409 நபர்களுக்கு ரூ.14 இலட்சம் மதிப்பீட்டில் தையல் இயந்திரங்கள்.



*விலையில்லா மிதிவண்டிகள்*

- 370 நபர்களுக்கு ரூ.13.42 இலட்சம் மதிப்பீட்டில் விலையில்லா சலவைப் பெட்டிகள்.

❖ 10ஆம் வகுப்புப் பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற 59 மாணவ, மாணவியர்களுக்கு தலைசிறந்த பள்ளியில் சேர்ந்து படிக்க ரூ.14.06 இலட்சம் நிதியுதவி.

❖ 10ஆம் வகுப்புப் பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற 93 மாணவ, மாணவியர்க்கு ரூ.1.35 இலட்சம், 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற 61 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.1.75 இலட்சம் பரிசுத் தொகை.

❖ தந்தை பெரியார் விருதாக 59 மாணவ, மாணவிகளுக்கு ரூ. 4.70 இலட்சம் பரிசுத்தொகை. பேரறிஞர் அண்ணா விருதாக 80 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.6.40 இலட்சம் பரிசுத் தொகை.

❖ பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சேர்ந்த 26,838 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.4.86 கோடி மற்றும் கிராமப்புர பெண்களுக்கு ஊக்குவிப்புத் தொகையாக 48,580 மாணவிகளுக்கு ரூ.3 கோடி ஊக்குவிப்புத் தொகை, சிறுபான்மையின 3,260 மாணவ, மாணவியர்களுக்கு ரூ. 3.16 கோடி கல்வி உதவித் தொகை.

**உலமாக்கள் ஓய்வூதியத் திட்டம்**

❖ 73 உலமாக்களுக்கு தலா ரூ.1,000 வீதம் மொத்தம் ரூ.91,000 ஓய்வூதியம்.

❖ நரிக்குறவர் நலவாரியத்தில் உறுப்பினர்களாக உள்ள 62 நபர்களுக்கு ரூ.1,500 ஓய்வூதியம்.



*உலமாக்களுக்கு ஓய்வூதியம்*

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

- ரூ.3.23 கோடி மதிப்பில் 10,528 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. 51,267 ஆதிதிராவிடர் மாணவ, மாணவியர்க்கு ரூ.16.91 கோடி கல்வி உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. 8,848 மாணவ மாணவியர்களுக்கு சீருடைகளும் 11,130 மாணவ, மாணவியர்களுக்கு பாடப் புத்தகங்களும், மாணவ, மாணவியர்களுக்கு குறிப்பேடுகளும் 31,920 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலவிடுதிகளில் தங்கிப் பயிலும் 3,301 மாணவ, மாணவியர்களுக்கு போர்வைகள்.

- தாட்கோ மூலம் 4,035 நபர்களுக்கு ரூ.7.89 கோடி மானியத்துடன் கூடிய கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

# மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை

## தன்னிறைவுத்திட்டம்

❖ பொதுமக்களின் பங்களிப்புடன் ரூ.7.52 கோடி மதிப்பீட்டில் 158 பணிகள்.

## முழு சுகாதாரத் திட்டம்

❖ ரூ.1.66 கோடி மதிப்பீட்டில் 635 பள்ளிகள் மற்றும் அங்கன்வாடிகளில் முழுமையான கழிப்பறைகள்.




*மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின்
பசுமை வீடுகள் திட்டம்*

## சிறப்புச் சாலைகள் திட்டம்

❖ ரூ.10.28 கோடி செலவில் 65.565 தூரம் கிலோ மீட்டர் சாலைப்பணிகள்.

**பசுமை வீடுகள் திட்டம்**

❖ ரூ.141.672 கோடி மதிப்பீட்டில் ஏழை, எளிய குடும்பங்களுக்கு சூரிய மின் சக்தியுடன் கூடிய 7,266 பசுமை வீடுகள்.

**தமிழ்நாடு குக்கிராமங்கள் கட்டமைப்பு மேம்பாட்டுத் (தாய் திட்டம்) திட்டம்**

❖ 141 கிராம ஊராட்சிகளைச் சேர்ந்த 2,082 குக்கிராமங்களில் ரூ.53.98 கோடி மதிப்பீட்டில் 7,233 பணிகள்.

**இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டம்**

❖ ரூ. 112.396 கோடி செலவில் 10,312 வீடுகள்.

❖ ரூ.3.03 கோடி மதிப்பீட்டில் 250 ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள்.

❖ ரூ.65.9 இலட்சம் மதிப்பில் 16 ஆண்கள் சுகாதார வளாகங்கள்.

**சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்**

❖ ரூ.27.39 கோடி மதிப்பீட்டில் 1,294 பணிகள்.

**நபார்டு திட்டம்**

❖ ரூ.31.35 கோடி மதிப்பீட்டில் 66 கிராமப்புறச் சாலைகள்.

**மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்**

❖ 3,89,620 குடும்பங்கள் 3,41,904 பதிவு செய்யப்பட்டு 4,03,257 தனிநபர்களுக்கு வேலை அடையாள அட்டை

வழங்கப்பட்டு, 2.543 கோடி மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டு ரூ.360.559 கோடி மதிப்பீட்டில் 3,920 பணிகள்.

### நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சித் திட்டம்

❖ ரூ.13.57 கோடி செலவில் 441 பணிகள்.

❖ 13ஆவது நிதிக்குழு மானிய திட்டத்தின் கீழ் ரூ.12.80 கோடி மதிப்பீட்டில் 152.25 கி.மீட்டர் நீளத்திற்கு 67 சாலைப் பணிகள்.

❖ பயன்படுத்தப்பட்ட பிளாஸ்டிக் கழிவுகளைக் கொண்டு ரூ.1.23 கோடி செலவில் 15.34 கி.மீ. நீளத்திற்கு பிளாஸ்டிக் சாலை.

### சாண எரிவாயுத் திட்டம்

❖ ரூ.2,16,000 மானியத்துடன் 27 கலன்கள்.

### ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்

❖ ரூ.10.46 கோடி மதிப்பீட்டில் 1,105 பணிகள்.

### குடிநீர் அபிவிருத்தித் திட்டம்

❖ ரூ.53.10 கோடி மதிப்பீட்டில் 85 சதவிகிதப் பணிகள்.

### பேரூராட்சிகள்

❖ பேரூராட்சிகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.22.50 இலட்சம் மதிப்பீட்டில் 50 கழிப்பிடங்கள்.

**தமிழ்நாடு நகர்ப்புற சாலைக் கட்டமைப்புத் திட்டம்**

❖ ரூ.92.57 இலட்சம் மதிப்பீட்டில் 4 தார்சாலைகள்.

❖ பகுதி–2 திட்டத்தின் கீழ் 1 பேரூராட்சியில் ரூ.30 இலட்சம் மதிப்பில் 1 புதிய அலுவலகக் கட்டடம்.

**ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்**

❖ தார்சாலை பணி, குடிநீர் பராமரிப்புப் பணிகள், வடிகால் பணிகள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணி ரூ.3.78 கோடி செலவில் 14 பணிகள்.

**நபார்டு திட்டம்**

❖ ரூ.3.85 கோடி செலவில் 25 தார்சாலைகள்.

**நகராட்சிகள்**

❖ ரூ. 2.95 கோடி மதிப்பில் புதிய கட்டடங்கள்.

❖ ரூ.87.44 இலட்சம் செலவில் 2.810 மீட்டர் நீளம் பிளாஸ்டிக் சாலைகள் கழிவுகளைக் கொண்டு தார்சாலை.

❖ வறட்சி நிவாரண நிதியின் கீழ் ரூ.45 இலட்சம் மதிப்பில் 33 ஆழ்துளை கிணறு மற்றும் மினிபவர் பம்ப்.

**ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்**

❖ ரூ.1.40 கோடி செலவில் மழைநீர் வடிகால். ரூ.1.70 கோடி மதிப்பில் துப்புரவுப் பணியாளர்களுக்கு நவீன அடுக்குமாடியுடன் கூடிய 24 புதிய குடியிருப்புகள் கட்டும்பணி.

- ❖ பகுதி – 2 திட்டத்தின் கீழ் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் நவீன ஆட்டிறைச்சி கொட்டில் கட்டப்பட்டுள்ளது.

**திறந்த வெளியில் மலம் கழிப்பதை ஒழிக்கும் திட்டம்**

- ❖ ரூ.45 இலட்சம் மதிப்பீட்டில் 3 புதிய பொதுக் கழிப்பிடம்.

**இயக்கலும் பராமரிப்பு மற்றும் இடைவெளி நிரப்புதல் திட்டம்**

- ❖ ரூ.2 கோடி மதிப்பீட்டில் புதிய அலுவலகக் கட்டடம் கட்டும் பணி.
- ❖ போக்குவரத்து மேலாண்மைத் திட்டம் மற்றும் நகராட்சி நிதியின் கீழ் பலப்பகுட்டை சிறுவர் பூங்கா ரூ.35 இலட்சம் மதிப்பீட்டில் புதுப்பிப்பு.
- ❖ ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் சர்வதேச தர அளவிலான 2 புதிய கழிப்பிடம் கட்டும் பணி.
- ❖ மாநில நிதி திட்டத்தின் கீழ் ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் சர்வதேச தர அளவிலான 1 புதிய கழிப்பிடம் கட்டும் பணி.

**தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு ஆணையம் (மகளிர் திட்டம்)**

- ❖ 1,56,780 உறுப்பினர்கள் கொண்ட மகளிர் சுய உதவிக்குழுக்கள் ரூ.79.13 கோடி தொகையை சேமிப்பாக வைத்துள்ளனர்.
- ❖ 10,452 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதிக் கடனாக ரூ.1.67 கோடி, பொருளாதாரக் கடனாக ரூ.2.43 கோடி.



*தொட்டில் குழந்தைத் திட்டம்*

- 10,452 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.4.36 கோடி வங்கிகளின் மூலம் நேரடிக் கடன்.
- 20 ஊராட்சி அளவிலான குழுக் கட்டமைப்புகளுக்கு ஊக்கத் தொகையாக ரூ.20 இலட்சமும் பெருங்கடனாக ரூ. 53.50 இலட்சமும் கடனுதவி.
- 765 இளைஞர்களுக்கு ரூ.62.23 இலட்சம் செலவில் தொழில் மேம்பாட்டுப் பயிற்சி.

## சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை

### குழந்தைத் திருமண தடுப்புச் சட்டம் 2005

- 177 பெண் குழந்தைத் திருமணங்கள் தடுத்து நிறுத்தம்.

**பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்**

❖ 523 குடும்பங்களைச் சார்ந்த 1,040 பெண் குழந்தைகளுக்கு ரூ.1.92 கோடி.

**தொட்டில் குழந்தைத் திட்டம்**

❖ 13 ஆண் குழந்தைகள் மற்றும் 103 பெண் குழந்தைகள் என 116 குழந்தைகளை குழந்தை இல்லாத பெற்றோர்களுக்கு தத்து வழங்கப்பட்டுள்ளது. தத்து நிறுவனங்கள் தருமபுரி மாவட்டத்தில் இல்லாத காரணத்தால், பிற மாவட்டங்களில் உள்ள தத்து நிறுவனங்களுக்கு தொட்டில் குழந்தை வரவேற்பு மையத்தில் பெறப்பட்ட குழந்தைகள் வழங்கப்பட்டு அவர்கள் மூலம் தத்து வழங்கப்பட்டுள்ளது.

**புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்**

❖ 8 ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் நகராட்சிகள் என 8 பள்ளிகளில் 5 வயது முதல் 14 வயது வரை மொத்தம் 1,52,654 மாணவ, மாணவியர்கள் பயன்.

**10 வகை கலவை சாதங்கள்**

❖ 2,725 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.3.95 இலட்சம் செலவில் 10 வகையான கலவை சாதங்கள்.

**ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம்**

❖ 1,078 முதன்மை மையங்களும் 243 குறு மையங்களும் செயல்பட்டு வருகின்றன.

❖ நாளொன்றுக்கு 37,095 குழந்தைகளுக்கு, முன்பருவக் கல்வி மற்றும் மதிய உணவு.




*மாற்றுத்திறனாளிகளுக்கு மோட்டார் பொருத்திய மூன்று சக்கர வாகனம்*

❖ 6 மாதம் முதல் 36 மாதங்கள் வரையுள்ள 4,9612 குழந்தைகளுக்கு, இணை உணவு.

❖ 10,498 இணை உணவு உண்ணும் கர்பிணிகள் 8,634 பாலூட்டும் தாய்மார்கள் பயன்.

❖ 48,269 குழந்தைகளுக்கு ரூ.1.49 இலட்சம் மதிப்பீட்டில் முட்டைகள்.

❖ 220 வளர் இளம் பெண்களுக்கு தொழிற்பயிற்சி.

## மாற்றுத்திறனாளிகள் நலத்துறை

- ❖ மாற்றுத்திறனாளிகளை திருமணம் செய்து கொள்ளும் 51 சாதாரண நபருக்கு ரூ.15.50 இலட்சம் திருமண உதவித்தொகை.
- ❖ 20,539 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.10.48 கோடி செலவில் நலத்திட்ட உதவிகள்.
- ❖ 8,976 நபர்களுக்கு மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள அட்டைகள்.
- ❖ 2,235 நபர்களுக்கு இலவசப் பேருந்து பயணச் சலுகை அட்டைகள்.
- ❖ 2,289 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.65.93 இலட்சம் மதிப்பில் உதவி உபகரணங்கள்.
- ❖ கடுமையாக இயலாதோர், மனவளர்ச்சி குன்றியோர் மற்றும் தசைசிதைவு நோயால் பாதிக்கப்பட்ட 6,988 நபர்களுக்கு மாதம் தலா ரூ.1,000 வீதம் பராமரிப்பு உதவித் தொகை.

## வேளாண்மைத்துறை

### விதைப்பெருக்குத் திட்டம்

- ❖ 652.616 மெட்ரிக் டன் சான்று நெல் விதைகள், 100.250 மெட்ரிக் டன் சிறுதானிய சான்று விதைகள் 594.273 மெட்ரிக் டன் பயறு வகைப் பயிர்கள், 619.541 மெட்ரிக் டன் எண்ணெய் வித்து பயிர்களின் சான்று விதைகள் விநியோகம்.
- ❖ 76,497 விவசாயிகளுக்கு ரூ.2.38 கோடி மானியத்தில் விதை கிராமத் திட்டத்தின் கீழ் 50 சதவீத மானிய



*வேளாண் உற்பத்திக்கான விருது*

விலையில் நெல், சிறு தானியங்கள், பயறு வகை பயிர்களின் சான்று விதைகள் மொத்தம் 1,069 மெட்ரிக் டன்கள் வழங்கல்.

❖ தரமான சான்று விதைகள் உற்பத்தி பற்றிய 378 தொழில்நுட்ப பயிற்சிகள் ரூ.56 இலட்சம் மதிப்பீட்டில் அளிக்கப்பட்டு 38,500 விவசாயிகள் பயன்.

**தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம்**

❖ ரூ.14.43 கோடி செலவில் திருத்திய நெல் சாகுபடி முறைகள், பயறு வகைகள், தீவிர சிறுதானிய உற்பத்தி

திட்டம், அதிக விளைச்சல் பெற துல்லியப் பண்ணையம் அமைத்தல்.

❖ உழவர் பெருவிழா மூலம் ரூ.48.94 இலட்சம் மதிப்பீட்டில் 39.166 விவசாயிகள் பயன் அடையும் வகையில் இடுபொருட்கள்.

## மீனவர் நலன்

### தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம்

❖ பண்ணைக்குட்டையில் மீன்வளர்ப்பு மற்றும் மீன் குஞ்சு வளர்ப்பு, மிதவை கூண்டில் மீன் வளர்ப்பு, வண்ண மீன் வளர்ப்பு, மீன் விற்பனைக் கூடம் அமைத்தல், மண்குட்டையில் மீன் விதை வங்கி அமைத்தல் ஆகியவற்றிற்காக 22 மீனவர்களுக்கு ரூ.21.59 இலட்சம் மானியம்.

### தேசிய வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம்

❖ 50 சதவீதம் மானியத்தில் மீன்வலை வாங்கிடும் திட்டத்தின் கீழ் 32 நபர்களுக்கு ரூ.2.40 இலட்சம் மானியம்.

## உயர்கல்வித் துறை

❖ செட்டிக்கரையில் ரூ.49.50 கோடி மதிப்பில் பொறியியல் கல்லூரி.

❖ அரூர் மற்றும் பாப்பிரெட்டிப்பட்டியில் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி.

❖ பாப்பிரெட்டிப்பட்டியில் பெரியார் பல்கலைக்கழக உறுப்பு கல்லூரிக்கு ரூ.7.25 கோடி மதிப்பில் கட்டடம் கட்டும் பணி.

❖ காரிமங்கலத்தில் அரசு மகளிர் கலை – அறிவியல் கல்லூரி.

❖ தமிழ்நாடு திறந்த வெளிப் பல்கலைக்கழக மண்டல மையம் மற்றும் சமுதாயக்கல்லூரி.

❖ தருமபுரி அரசு கலைக்கல்லூரியில் முதுநிலை விரிவாக்க கல்வி மையம்.

## வேளாண் பொறியியல் துறை

### தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம்

❖ 1,490 விவசாயிகளுக்கு ரூ.4.81 கோடி மானியத்தில் வேளாண்மை இயந்திரங்கள்/கருவிகள்.

### வேளாண்மை இயந்திரமயமாக்குதல் திட்டம்

❖ 69 விவசாயிகளுக்கு ரூ.2.09 கோடி மானியத்தில் டிராக்டர், பவர் டில்லர், ரோட்டவேட்டர் போன்ற இயந்திரங்கள், கருவிகள்.

### ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம்

❖ ரூ.58.03 இலட்சம் செலவில் 168.620 ஹெக்டேர் பரப்பில் சமஉயர கற்சுவர்கள் மற்றும் தடுப்பணைகள்.

### மழைநீர் சேகரிப்பு மற்றும் மேலாண்மைத் திட்டம்

❖ ரூ.18.96 இலட்சம் செலவில் 15 பண்ணைக் குட்டைகள், தடுப்பணைகள் மற்றும் கிராமக் குட்டைகள்.

❖ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்த கிராமப்புற இளைஞர்களுக்கு வேளாண் கருவிகளை இயக்குவதற்கான 6 மாத கால பயிற்சித் திட்டத்தின் கீழ் பயிற்சி.

❖ 1,759 விவசாயிகள் பயன்பெறும் வகையில் ரூ.5.84 கோடி மதிப்பீட்டில் திட்டங்கள்.

## தோட்டக்கலைத்துறை

### ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம்

❖ உயர் விளைச்சல் தரும் வீரிய ஒட்டுரக காய்கறி விதைகள் மற்றும் நடவுச் செடிகள் ரூ.62 இலட்சம் மதிப்பில் 50 சதவிகித மானியத்தில் விவசாயிகளுக்கு விநியோகம்.

### ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்

❖ பழக்கன்றுகள் மற்றும் காய்கறி விதைகள், பயிர்ப்பாதுகாப்பு கருவிகள், சொட்டு நீர்ப் பாசனக் கருவிகள் மற்றும் பயிற்சி.

### துல்லிய பண்ணையம் திட்டம்

❖ 900 எக்டேர் பரப்பளவில் ரூ.1.89 கோடி மதிப்பில் உயர் விளைச்சல் தரும் காய்கறி, வாழை சாகுபடி.

### மானாவாரி பகுதி மேம்பாட்டுத் திட்டம்

❖ தோட்டக்கலைச் சார்ந்த பண்ணையம் அமைக்க ரூ.1.22 கோடி செலவில் 187 எக்டேர் நிலம் சீர்செய்து

ஆழ்குழாய் கிணறுகள், காய்கறி சாகுபடி செய்யும் வகையில் விதைகள், கன்றுகள், இடுபொருள்கள்.

**தேசிய நுண்ணீர் பாசன இயக்கம்**

❖ தோட்டக்கலை பயிர் சாகுபடி செய்யும் குறு, சிறு விவசாயிகளுக்கு 100 சதவிகித மானியத்தில் இதர விவசாயிகளுக்கு 75 சதவிகித மானியத்திலும் ரூ.28.49 கோடி மதிப்பீட்டில் 5,521 எக்டேர் பரப்பில் சொட்டு நீர்ப் பாசனம்.

**தேசிய மூங்கில் இயக்கம்**

❖ ரூ.0.50 இலட்சம் மதிப்பில் 12.50 எக்டேர் பரப்பளவில் மூங்கில் சாகுபடித் திட்டம்.

**தேசிய மூலிகை பயிர்கள் இயக்கம்**

❖ ரூ.25.5 இலட்சம் மதிப்பீட்டில் மருந்து கூர்க்கன் சாகுபடிக்கென மானியம் பெறப்பட்டு முழுத் தொகையும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை

**வேளாண் வணிகத் திட்டம்**

❖ அறுவடை காலத்தில் ரூ.2.34 கோடி மதிப்பிலான 687.265 மெ.டன் விலைப் பொருட்கள் இருப்பு வைக்கப்பட்டு 114 நபர்களுக்கு ரூ.1.17 கோடி பொருளீட்டுக் கடன்.

❖ தருமபுரி விற்பனைக் கூடப் பகுதிகளில் 60257.263 மெ.டன் அளவுள்ள விலைப் பொருட்களுக்கு கட்டணத் தொகையாக ரூ.469.807 இலட்சம் வசூல்.

❖ வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையின் சார்பில் விவசாயிகள் மற்றும் வணிகர்கள் பயன்பாட்டிற்காக 1,000 மெ.டன் கொள்ளளவு கொண்ட புளி குளிர்பதன கிடங்கு ரூ.2 கோடி மதிப்பில் கட்டப்பட்டு முடிக்கும் தருவாயில் உள்ளது.

❖ தருமபுரி, அரூர், பாலக்கோடு மற்றும் பென்னாகரம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் பரிவர்த்தனைக்கூடம், ஊரக கிடங்கு குளிர்பதன கிடங்குகள் அலுவலகக் கட்டடம் மற்றும் உலர் கலங்கள் ரூ.6.69 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

❖ 114 விவசாயிகளுக்கு பொருளீட்டுக் கடனாக ரூ.1.17 கோடி வழங்கப்பட்டுள்ளது. விற்பனைக் கூடப்பகுதிகளில் 60,257.263 மெ.டன் அளவுள்ள விளைப் பொருட்களுக்கு விற்பனைக் கட்டணம் ரூ.4.70 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது.

❖ நீர் வள நில வளத்திட்டத்தில் விவசாயிகள் பயன்பாட்டிற்காக சேமிப்பு கிடங்கு மற்றும் உலர்கலங்கள் ரூ.53.1 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

## பட்டு வளர்ச்சித்துறை

- ❖ 2,375 ஏக்கர் மல்பரி நடவு குறியீடு நிர்ணயிக்கப்பட்டு 2,127 ஏக்கர் மல்பரி நடவு.
- ❖ 4.30 இலட்சம் வெண்பட்டு முட்டைகள் அறுவடை செய்யப்பட்டு 3.18 இலட்சம் கிலோகிராம் வெண்பட்டு கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. பட்டு வளர்ச்சித்துறையின் கீழ் மத்திய மற்றும் மாநில அரசு நிதியுதவியுடன் கிரியா ஊக்கத்திட்டத்தின் கீழ் புதிதாக மல்பரி நடவு செய்துள்ள 741 விவசாயிகளுக்கு ரூ.67.08 இலட்சம் மல்பரி நடவு ஊக்க உதவித்தொகை.
- ❖ தனிப்புழு வளர்ப்பு மணை அமைத்துள்ள 52 பட்டு விவசாயிகளுக்கு மானியத்தொகையாக ரூ.38.39 இலட்சம் நிதியுதவி.
- ❖ 224 ஏக்கர் மல்பெரி தோட்டத்திற்கு 164 விவசாயிகளுக்கு சொட்டுநீர் பாசனம் அமைத்ததற்காக ரூ.46.62 இலட்சம் மானியம்.

## கால்நடை பராமரிப்புத்துறை

### தீவனப் பயிர்த்திட்டம்

- ❖ 2,950 ஏக்கர் நிலப்பரப்பில் தீவனப் பயிர் சாகுபடிக்காக 8,715 பயனாளிகளுக்கு 100 சதவிகித மானியத்தில் ரூ.2.95 கோடி ஒதுக்கீடு.

### கோழிப்பண்ணை வளர்ச்சித் திட்டம்

- ❖ ரூ.93.26 இலட்சம் மதிப்பில் 50 சதவிகித மானியத்துடன் 275 நாட்டுக்கோழி பண்ணைகள்.



*விலையில்லா கறவை மாடுகள் வழங்கும் திட்டம்*

- 10 கால்நடை மருந்தகங்களுக்கு ரூ.2.66 கோடி மதிப்பில் 10 புதியக் கட்டடங்கள்.
- ரூ.1.89 கோடி மதிப்பில் 33 கால்நடை மருந்தகங்கள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

**தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம்**

- ரூ.45 இலட்சம் மதிப்பீட்டில் 3 கால்நடை மருந்தகங்களுக்கான கட்டடப் பணிகள்.
- ரூ.50 இலட்சம் மதிப்பில் செட்டிக்கரை, மொரப்பூர், பென்னாகரம், அரூர் மற்றும் பெரியாம்பட்டியில் கால்நடைகளுக்கான உலர் தீவன கிடங்கு.

### கால்நடை பாதுகாப்புத் திட்டம்

- 8 ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 343 குக்கிராமங்களில் உள்ள கால்நடைகள் பயன்பெறும் வண்ணம் நோய் தடுப்பு மற்றும் நோய் நீக்கப் பணிகளுக்காக ரூ.8.58 இலட்சம் மதிப்பில் 343 கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம்கள்.

### வறட்சி மேலாண்மைத் திட்டம்

- 50 சதவிகித மானியத்தில் கால்நடைகளுக்கு குறைவில்லா தீவனம் வழங்கும் பொருட்டு 1,450 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.98.6 இலட்சம் ஒதுக்கீட்டில் 2,300 பயனாளிகள் மூலம் தீவன சோளப்பயிர் விளைவிக்கப்பட்டு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக ஏனைய பயனாளிகளுக்கு 50 சதவிகித மானியம்.

## வனத்துறை

- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 4,09,725 மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டு நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

## கூட்டுறவுத்துறை

- மக்களாட்சித் தத்துவம் மலர ஏதுவாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அமைக்கப்பட்ட மாநில கூட்டுறவு தேர்தல் ஆணையம் வாயிலாக 190 தொடக்க கூட்டுறவு சங்கங்களுக்கு தேர்தல்.

- ❖ 20,253 விவசாயிகளுக்கு ரூ. 92.61 கோடி குறுகிய கால பயிர்க்கடன், 4,360 ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்தவர்களுக்கு ரூ.19.59 கோடி பயிர்க்கடன், 758 விவசாயிகளுக்கு ரூ. 7.44 கோடி முதலீட்டுக் கடன், வேளாண் விளைப்பொருட்கள் ஈட்டு கடனாக 202 விவசாயிகளுக்கு ரூ.3.31 கோடி.

- ❖ தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கங்கள் மூலம் 62,897 விவசாயிகளுக்கு ரூ.311.34 கோடி நகைக்கடன், 363 மாற்றுத் திறனாளிகளுக்கு ரூ.65 இலட்சம் சிறுபான்மையினருக்கு 207 நபர்களுக்கு ரூ. 54 இலட்சம் என பல்வேறு கடன் வழங்கப்பட்டுள்ளது. விவசாயிகள் தங்கள் விளைப்பொருட்களை சேமிக்க ஏதுவாக நபார்டு வங்கி நிதியுதவியுடன் தலா ரூ.11 இலட்சம் மதிப்பில் 44 ஊரகக் கிடங்குகள் ரூ.4.84 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ளது.

**மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு அலகு**

- ❖ 395 நபர்களுக்கு இலவச பேருந்து பயண அட்டையும், உலக எய்ட்ஸ் தினத்தன்று 185 குழந்தைகளுக்கு ரூ.6.81 இலட்சம் மதிப்பில் கல்வி மற்றும் மருத்துவ உதவித் தொகை.

**உழவர் பாதுகாப்புத் திட்டம்**

- ❖ 446 நபர்களுக்கு ரூ.1,000 வீதம் மாதாந்திர உதவித்தொகை.

### தருமபுரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை

❖ தருமபுரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ரூ.4.50 கோடி மதிப்பில் எம்.ஆர்.ஐ ஸ்கேன்.

## பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருத்துவத்துறை

❖ 11 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ரூ.472.8 இலட்சம் மதிப்பில் புதிய கட்டடங்கள்.

### டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம்

❖ 15,477 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ரூ.16 கோடியே 62 இலட்சம்.

### பள்ளி சிறார் கண்ணொளி காப்போம் திட்டம்

❖ 6 மற்றும் 7ஆம் வகுப்பு மாணவர்களுக்கு இலவச கண் பரிசோதனை செய்யப்பட்டு 2,289 மாணவர்களுக்கு கண் கண்ணாடிகளும் வழுங்கப்படவுள்ளது. பல் பாதுகாப்புத் திட்டத்தில் 18,131 குழந்தைகளுக்கு பல் சிகிச்சையும், யானைக்கால் நோயினால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு மாதந்தோறும் ரூ.400 உதவித்தொகை.

❖ பிறவி குறைபாடுடைய 1,406 குழந்தைகள் கணக்கெடுக்கப்பட்டு சிகிச்சை.

### மாவட்ட பார்வை இழப்புத் தடுப்புச் சங்கம்

❖ மாவட்ட பார்வை இழப்புத் தடுப்புச் சங்கம் மற்றும் அரசு தலைமை மருத்துவமனை, தொண்டு நிறுவனங்கள், தனியார் மருத்துவமனைகள் மூலம் கண்புரை நோய்

மற்றும் இதர குறைபாடுகளுக்கு நவீன சிகிச்சைப் பெற்று 24,120 நபர்கள் பயனடைந்துள்ளனர். 1,36,340 பள்ளிக் குழந்தைகளுக்கு கண் பரிசோதனை.

❖ 2,231 மாணவ, மாணவியர்களுக்கு பார்வைத் திறன் மூக்குக் கண்ணாடிகள் வழங்கி பார்வை குறைபாடு.

## இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை

❖ இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை சார்பில் 21,05,413 நபர்களுக்கு சிகிச்சை.




*மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா சீருடைகள், பாடப் புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள்*

❖ டெங்கு காய்ச்சல் பரவிய காலத்தில் அனைத்து மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் நிலவேம்பு குடிநீர், பப்பாளி இலைச்சாறு, மலைவேம்புச் சாறு, புற மற்றும் உள் நோயாளிகளுக்கு வழங்கப்பட்டது.

## பள்ளிக் கல்வித்துறை

❖ 9 அரசு உயர்நிலைப்பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும், 58 நடுநிலைப்பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்தப்பட்டுள்ளது. இரண்டு புதிய தொடக்கப்பள்ளிகள்.



*கல்வி உதவித் தொகை*

❖ 26,702 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.42.70 கோடி மதிப்பீட்டில் விலையில்லா மடிக்கணினிகள்.

❖ 17,58,272 மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா பாடநூல்கள். 22,64,051 மாணவ, மாணவியர்களுக்கு பாடக்குறிப்பேடுகள்.

- 45,848 மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள்.

- 6 முதல் 8ஆம் வகுப்பு பயிலும் 2,11,955 மாணவ, மாணவியர்களுக்கும் மற்றும் உயர்நிலை, மேல்நிலைக்கல்வி பயிலும் 1,43,848 மாணவ, மாணவியர்களுக்கும் தலா 4 செட் வீதம் விலையில்லா வண்ணச் சீருடைகள்.

- வருவாய் ஈட்டும் தாய் தந்தையர் விபத்தில் இறந்தாலோ அல்லது நிரந்தர முடக்கம் அடைந்தாலோ அவர்தம் குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகை ரூ.50,000 வழங்கும் திட்டத்தின் கீழ் 5 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.2.5 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**விலையில்லா பாடநூல் வழங்கும் திட்டம்**

- 6 முதல் 12ஆம் வகுப்பு பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் 17,58,272 விலையில்லா பாடநூல்களும் இலவச பேருந்து பயண சலுகை அட்டை வழங்கும் திட்டத்தில் 6 முதல் 12ஆம் வகுப்பு பயிலும் 1,42,889 மாணவ, மாணவியர்களுக்கு 1,42,889 இலவச பேருந்து பயண அட்டைகளும், விலையில்லா சீருடை வழங்கும் திட்டத்தின் கீழ் 6,7,8ஆம் வகுப்பு பயின்று வரும் 2,11,955 மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா சீருடைகள்.

- வரைகலைப்பெட்டி 82,596, வண்ணப் பென்சில்கள் 42,059, புத்தகப் பை 1,10,898.

## அனைவருக்கும் கல்வி இயக்கம்

- ❖ ஆசிரியர்கள் கற்றல், கற்பித்தல் உபகரணங்கள் தயாரிப்பதற்காக ஆசிரியர் மானியம் ரூ.500 வீதம் ரூ.26.22 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.
- ❖ பள்ளி செல்லா மற்றும் இடைநின்ற குழந்தைகள் கல்வி பயில இதுவரை ரூ.3.11 கோடி செலவிடப்பட்டுள்ளது.
- ❖ பள்ளிக்குத் தேவையான பள்ளி தளவாடப் பொருட்கள் வாங்குவதற்கான பள்ளி மானியம் 1,161 (1 முதல் 5 வகுப்புகள்) பள்ளிகளுக்கு தலா ரூ.5,000 வீதம் 543 (6 முதல் 8 வகுப்புகள்) பள்ளிகளுக்கு தலா ரூ.7,000 வீதம் 1,704 பள்ளிகளுக்கு ரூ.2.87 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- ❖ கட்டுமானப் பணிகளுக்கென்று ரூ.12.12 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு இதுவரை ரூ.12.12 கோடி செலவில் பணிகள்.

## மாவட்ட தொழில் மையம்

- ❖ மாவட்ட தொழில் மையத்தின் சார்பில் 2,054 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு தொழில் முனைவோர் ஒப்புகைச் சான்று வழங்கப்பட்டுள்ளது. 1,147 பொதுப் பிரிவினருக்கும் 168 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கும் புதிய தொழில் தொடங்குவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு

உருவாக்கும் திட்டத்தின் கீழ் 317 இளைஞர்களுக்கு ரூ.5.43 கோடி கடனுதவி ரூ.81.53 இலட்சம் மானியத்துடன் வழங்கப்பட்டுள்ளது.

❖ குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு மூலதன மானியமாக ரூ.70.115 இலட்சமும், மின் மானியமாக ரூ.33.75 இலட்சமும், மின்னாக்கி மானியமாக ரூ. 21.01 இலட்சமும் மதிப்புக் கூட்டு வரி மானியமாக ரூ.9.48 இலட்சமும் தொழில் நிறுவனங்களை ஊக்குவிக்கும் வகையில் வழங்கப்பட்டுள்ளது.

**புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம்**

❖ 22 நபர்களுக்கு ரூ. 10 கோடி மதிப்பில் ரூ.2.51 கோடி மானியமாக வழங்க முடிவு செய்யப்பட்டு இதுவரை 21 நபர்களுக்கு ரூ.7.30 கோடி வங்கிகளால் கடன் தொகை வழங்கப்பட்டு 21 நபர்களுக்கு ரூ.1.82 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

## வேலைவாய்ப்புத்துறை

❖ வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித் தொகை வழங்கும் திட்டத்தில் வேலைவாய்ப்பிற்காக பதிவு செய்து 5 ஆண்டுகள் முடிவுற்ற 21,290 இளைஞர்களுக்கு ரூ.1,27,76,550 கோடி உதவித் தொகை.

❖ வேலைவாய்ப்புத் துறையின் மூலம் 3 பார்வையற்றவர்களுக்கும், 28 அனைத்து வகை மாற்றுத்திறனாளிகளுக்கும், 865 தாழ்த்தப்பட்டோர்

மற்றும் இதர பிரிவினருக்கும் பணி நியமனம் செய்திட பரிந்துரை செய்து வேலைவாய்ப்பு.

**அமைப்பு சாராத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நல வாரியம்**

